2021

ஆண்டறிக்கை

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி

சுற்றாடல் அமைச்சு

சொபாதம் பியச

இல. 416/சீ/1

ரொபர்ட் குணவர்தன மாவத்தை,

பத்தரமுல்ல,

இலங்கை

உள்ளடக்கம்

01. பணிப்பாளர் சபை 46
தலைவரின் மதிப்பீடு 46
பணிக் குழு 47
02 அறிமுகம் 48
2.1. **தூர நோக்கு** 48
2.2. **குறிப் பணி** 48
2.3. **நிறுவன ரீதியான நோக்கங்கள்** 48
2.4. **இலங்கை காலநிலை நிதியத்தின் பங்களிப்பு** 50
03. நிறுவனத்தின் பயணப் போக்கு 54
04.சேவைகள் 56
4.1 **பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு** 56
4.2 **இலங்கை காபன் கடன் பிரேரணை திட்டம் (SLCCS).. 58**
4.3 **தூய்மை விருத்திப் பொறிமுறை (CDM).. 59**
4.4 **நிகர பூச்சிய வலுச் சக்தி சான்றுபடுத்துகை (Net Zero Energy) 60**
4.5 **காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை (Climate Positive Certification)..** 61
4.6 **மதியுறை சேவைகள்** 62
4.7 **கருத்திட்ட நிதி முகாமைத்துவம்** 62
05 எதிர்ப்பார் நிதி இலக்கு - 2021 63
06.நிதி விருத்தி 64
2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த படியான நிதி நிலைமைக் கூற்று 64
2021டிசம்பர் மாதம் 31ஆம் திகதியிலிருந்த உரிமை மாற்றக் கூற்று 66
2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியோட்டக் கூற்று 67
2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருட காலப் பகுதியில் இருந்தவாரான விபரமான வருமானக் கூற்று 68
2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிய நிதிக் கூற்று தொடர்பான விபரமான குறிப்பு 69
கணக்காய்வு அறிக்கைகள் 74

01. பணிப்பாளர் சபை

தலைவரின் மதிப்பீடு

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் ஆண்டறிக்கையை முன் வைப்பதற்குக் கிடைத்தமை தொடர்பாக நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான விபரமான மதிப்பீடும், உபாய வழி நெறி முறைகளை செயற்படுத்தும் நிலை தொடர்பான புதுப்பிப்பு தொடர்பான விபரங்களும் இவ் அறிக்கையின் ஊடாக முன் வைக்கப்படுகின்றது.

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் பேண்தகு சுற்றாடலுடன் தொடர்புடைய கருத்திட்டங்கள் மற்றும் பல மதியுறை சேவைகள் செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன. அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு, ISO 14064 – 1:2018 மற்றும் ISO 14067:2018 ஆகிய ஒத்திசைவு சான்றிதழ்கள் கையளிக்கப்படுகின்றது. குறித்த நிறுவனங்களினால் கணிப்பிடப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வு தொடர்பான செயற்பாடுகள் எமது கம்பனியினால் உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடே அத்தகைய அடிப்படையில் பெருமளவில் கையளிக்கப்படுகின்றன. இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான பிரிவின் நேரடி கண்காணிப்புன் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தேசிய பசுமை வீட்டு நிகழ்ச்சித் திட்டமாக இலங்கை காபன் பிரேரணை திட்டம் எமது கம்பனியினால் முன்னெடுக்கப்படுகின்றது. நாட்டினுள் சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு எம்மால் முன்னெடுக்கப்படுகின்ற முயற்சி மற்றும் சேவை பரிந்துறையாளருக்கு அதியுயர் சேவையை கையளிக்கும் பொருட்டு இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் அர்ப்பணிப்பு தொடர்பாக நாம் மனதார பெறுமிதம் அடைகின்றோம். எமது பெறுமதி மிக்க சேவை வலையமைப்புத் தொடரை தொடர்ச்சியாக ஒரு சீர் நிலையில் பேணும் பொருட்டும், சர்வதேச தராதர நிலைகளின் பிரகாரம் அதனை பராமரிப்பதற்கும், செயற் திறன் மிக்கதாக செயற்படுவதற்கும் கம்பனியினால் தொடர்ச்சியாக முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

பேண்தகு பொருளாதார விருத்தி தொடர்பாகப் பங்களிப்பு செய்த வண்ணம் கம்பனி நீண்ட காலம் நிலையாக செயற்படக் கூடிய கம்பனியாக மாற்றும் பொருட்டு எதிர்க்காலத்தில் எமக்கு வாய்ப்பு கிடைக்குமெனும் நற் செய்தியுடனும், நம்பிக்கையுடனும் நாம் நமது செயற் பணிகளை முன்னெடுத்த வண்ணமுள்ளோம். எதிர்க்காலத்தில் மேலெழக் கூடிய சவால்களை வெற்றி கொண்ட வண்ணம் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி இலாபமீட்டக் கூடிய அரச நிறுவனமொன்றாக மாற்றியமைப்பதற்கு எம் வசமுள்ள மதிப்பிட முடியாத மானிட வளம் பிரயோசனப்படுமென நான் திடமாக நம்புகின்றேன்.

திரு சிரிபால அமரசிங்க - பணிப்பாளர் (தலைவர், மத்திய சுற்றாடல் அதிகார சபை)

கலாநிதி திரு பீ. எம். எஸ். பட்டகொட - பணிப்பாளர்

திடல் நிபுணர்

திருமதி வீ. இரேஷா தில்ஹானி - பணிப்பாளர் (பணிப்பாளர், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்)

பணிக் குழு

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி முறையே தலைவர், பிரதான நிறைவேற்று அதிகாரி, தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பமற்ற உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாகக் காணப்படும். தொழில்நுட்பக் குழு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் (SLAB) வழங்கப்பட்டுள்ள நிபுணத்துவத் தேவையை (ISO 14066) வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது.

20. அறிமுகம்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி, 2008 ஏப்ரல் 09 ஆம் திகதி கம்பனி இலக்கம் பீ. வீ 63781 இன் கீழும் 2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் கீழும் நிலை நாட்டப்பட்ட அரசுக்கு உரித்தான கம்பனியொன்றாகக் காணப்படுகின்றது. இந் நிறுவனம் 2020 செப்டம்பர் 25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் சுற்றாடல் அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இலங்கை காபன் நிதியம் (தனியார்) கம்பனி எனும் பெயரில் அழைக்கப்பட்டதுடன், சுற்றாடல் சார்ந்த கருத்திட்டங்கள் தொடர்பாகக் காட்டிய பங்களிப்பு மற்றும் விடயப் பரப்பை விஸ்தீரணப்படுத்தும் நோக்கில் 2016 ஜனவரி 29 ஆம் திகதியிலிருந்து இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி எனும் பெயரில் நிறுவனத்தின் பெயர் மாற்றத்துக்குட்படுத்தப்பட்டது.

கம்பனியின் முன்னுரிமை மிக்க நோக்கமாக காபன் உமிழ்வைக் கணிப்பிடுவதன் ஊடாகக் குறை காபன் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு வழங்கும் செயற்பாடு காணப்படுகின்றது. மேலும், அரச மற்றும் தனியார்ப் பிரிவின் காபன் உமிழ்வு செயலாற்றுகையை வினைத் திறன் மிக்கதாக்கும் பொருட்டு வழிகாட்டும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

2.1. தூர நோக்கு

காபன் பூச்சிய மற்றும் காலநிலையின் உண்மைத் தன்மையிலான பசுமை வீட்டு பொருளாதாரம்.

2.2. குறிப் பணி

காபன் குறைந்த மற்றும் காலநிலையின் உண்மைத் தன்மையிலான பசுமை வீட்டு அபிவிருத்தி தொடர்பாக இலங்கையருக்கு உதவுதல்.

2.3. நிறுவன ரீதியான நோக்கங்கள்

I. ஐக்கிய நாடுகளின் காலநிலை மாறுபாடுகள் தொடர்பான சட்டக இணக்கப்பாடு (UNFCCC) மற்றும் கியோதோ இணக்கப்பாட்டில் (Kyoto Protocol& உள்ளடக்கப்பட்டுள்ள சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறை (Clean Development Mechanism – CDM) உள்ளடங்களான செயற்பாடுகளை செயற்படுத்துதல்.

II. சுத்தப்படுத்துகை அபிவிருத்தி பொறிமுறையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை விருத்தி செய்யும் பொருட்டு தனியார், அரச மற்றும் அரச சார்பற்ற இயக்கங்களுக்கு மதியுறை சேவைகளை வழங்குதல், சுத்தப்படுத்துகை அபிவிருத்திப்

பொறிமுறையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை செல்லுபடியாக்கும் (Validation) மற்றும் உண்மைப்படுத்தும் (Verification) பொருட்டு தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதற்கு உறுதுணையாக அமையக் கூடிய கருத்திட்டங்களுக்கு நிதி வளங்களைக் கையளித்தல்.

III. சுத்தப்படுத்துகை மேம்படுத்துகை பொறிமுறையின் கீழ் சான்றுபடுத்தப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைத்தல் (Certified Emission Reduction - CER) மற்றும் தன்னிச்சையான பொறிமுறையின் (Voluntary Mechanism) மூலம் சான்றுபடுத்தப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைத்தல் (Verified Emission Reduction) மற்றும் காபன் வர்த்தகம்.

IV. சுற்றாடல் மதிப்பீடு உட்பட சுற்றாடல் உற்பத்தி விற்பனை நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

V. நிறுவன ரீதியான கருத்திட்டங்கள் மற்றும் உற்பத்தி மட்டத்திலான பசுமை வீட்டு வாயு உமிழ்வை அளவீடு செய்யும் பொருட்டும், உறுதிப்படுத்தும் பொருட்டும் செயற்படுதல்.

VI. சுற்றாடல் தர நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வு கூட வசதிகளை ஏற்பாடு செய்தல்.

VII. சுற்றாடல் சார் சுற்றுலாப் பயணத் துறை உட்பட சுற்றாடல் உற்பத்தி விற்பனை நிகழ்ச்சிகளை விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

VIII. உயிரியல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை (Bio – prospecting programme) விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

IX. சுற்றாடல் நேயமிக்க கழிவகற்றல் நிகழ்ச்சிகளை விருத்தி செய்தல்.

X. வணிக ரீதியாக சாத்தியப்பாடுள்ள வைத்திய மற்றும் ஆபத்தான கழிவுகளை எரிக்கும் செயற்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல்.

XI. கருத்திட்ட விருத்தியாளர்களுக்குத் தேவையான எந்தவொரு உதவிச் சேவையையும் கையளித்தல்.

XII. சுற்றாடல் உற்பத்தி மற்றும் சேவை மேம்படுத்துநர்களுக்கு நியாயமாக நிபந்தனைகளின் கீழ் நிதியுதவியகளை வழங்குதல்.

XIII. சுற்றாடல் சேவைகள் மற்றும் சுற்றாடல் மாசாக்கம் தொடர்பான பயன்படுத்துகை கட்டணத்தை அறவிடுதல் மற்றும் கிடைக்கின்ற நிதி சார் பலன்களின் ஊடாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கைத்தொழிலாளர்கள் மற்றும் வர்த்தகக் குழுக்களுக்கு சுற்றுச் சூழல் சார் சேவைகளை கையளித்தல்.

XIV. பசுமை அறிக்கையிடல் (Green Reporting) செயற்பாட்டை விருத்தி செய்யும் பொருட்டு தனியார் நிறுவனங்களிற்கும், முகவராண்மை நிறுவனங்களிற்கும் உதவி வழங்குதல்.

XV. பேண்தகு அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நிதியங்களை முதலீடு செய்தல்.

XVI. சுற்றாடலுடன் தொடர்புடைய எந்தவொரு வகையான சுற்றாடல் செயற்பாடுகளையும் செயற்படுத்துதல்.

XVII. இலங்கையை பசுமை பொருளாதாரம் (Green Economy) நோக்கி மாற்றீடு செய்யும் பொருட்டு தொடர்புடைய எந்தவொரு செயற் பணியையும் செயற்படுத்துதல்.

2.4. இலங்கை காலநிலை நிதியத்தின் பங்களிப்பு

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் நோக்கம் குறை காபன் வணிகப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்வதாகக் காணப்படுகின்றது. அதன் கீழான முயற்சிகளின் வாயிலாக வினைத் திறன் மிக்க, குறை காபன் தீர்வுகள் தொடர்பாகக் காணப்படுகின்ற திறன்களை மேம்படுத்துவதும், புத்தாக்க உபாய வழிகளை ஆராய்ச்சி செய்வதும், காணப்படுகின்ற வசதிகளின் ஊடாக காபன் உமிழ்வை வினைத் திறன் மிக்கதாக்கும் பொருட்டு வழிகாட்டும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளது. அதன் பிரகாரம், தொழிற் சாலைகளின் சுற்றாடல் பாதச் சுவடிகளை குறைத்த வண்ணம் அந் நிறுவனங்களின் பேண்தகு வணிகப் பயன்பாடுகளை மேம்படுத்துவதற்கும், வர்த்தகங்களின் சுற்றாடல் சார் தராதர நிலைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்படும்.

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் ISO **14064 – 1:2018** மற்றும் ISO **14067:2018** ஆகிய இசைவுச் சான்றிதழ்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வெளியிடப்படுகின்றன. நிறுவனத்தினால் கணிப்பிடப்படுகின்ற பசுமை வீட்டு வாயு உமிழ்வு விபரங்கள் கம்பனியினால் உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடு அச் சான்றிதழ்கள் கையளிக்கப்படுகின்றன. இலங்கை தராதர அங்கீகார சபையினால் மேற்குறித்த உறுதிப்படுத்துகை செயற்பாட்டை மேற்கொள்வதற்கு கம்பனிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதுடன், அது உள் நாட்டு ரீதியாகவும், வெளி நாட்டு ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி உள் நாட்டு வர்த்தக நிறுவனங்களுக்கு தரமுயர்ந்த உறுதிப்படுத்துகை சேவைகளை வழங்கிய வண்ணம் உலகலாவிய காலநிலை செயற்பாடுகள் தொடர்பாக அதன் வெளிப்படைத் தம்ன்மை மற்றும் பொறுப்புடைமை தொடர்பாக வெளிக் காட்டுவதற்கு வசதி வாய்ப்பு கிடைத்துள்ளது.

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றப் பிரிவின் நேரடி கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தேசிய பசுமை வீட்டு வாயு நிகழ்ச்சித் திட்டமாக இலங்கை காபன் கடன் பரிந்துறை திட்டம், கம்பனியின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது. இப் பிரேரணை திட்டத்தின் ஊடாக இலங்கையில் செயற்படுகின்ற தகைமை பெற்ற காபன் முகாமைத்துவக் கருத்திட்டங்கள் பதிவு செய்யப்படுவதுடன், எதிர்ப்பார் தரப்பினருக்கு தரமுயர்ந்த தன்மை உறுதிப்படுத்தப்பட்ட இலங்கைக்குரிய சான்றுபடுத்தப்பட்ட உமிழ்வைக் குறைக்கு (SCER) சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இலங்கை காபன் கடன் பரிந்துறை திட்டத்தின் மூலம் காபன் வர்த்தகத்துக்கான வசதிகளை முன்னெடுப்பதும், வணிக நடவடிக்கைகளுக்கு காபனை அகற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக முதலிடுவதற்கு வாய்ப்பு கிடைப்பதும், அவ் உமிழ்வைத் தீர்க்கும் பொருட்டு மேடையொன்றை உறுவாக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றது. இது சுற்றாடல் பொறுப்புடைமையை விஸ்தீரணப்படுத்தும் செயற்பாட்டுக்கு மேலதிகமாக, இதனை பேண்தகு எதிர்க் காலத்திற்கும் பங்களிப்பு செய்யும் செயற்பாடாகவும் சுட்டிக் காட்டலாம்.

இலங்கை காலநிலை நிதியத்தினால் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் ஊடாக இலங்கையின் பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைக்கும் பொருட்டு தூய்மை விருத்தி பொறிமுறையை பயன்படுத்துவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் மற்றும் இட வசதிகளை ஏற்பாடு செய்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் கருத்திட்ட திட்டமிடுகை ஆவணம் (PDD), மேற்பார்வை அறிக்கை (MR) தயாரிப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்ட இணக்கப்பாட்டின் (UNFCCC) தூய்மை விருத்திப் பொறிமுறை (CMD) ஆகியவற்றின் கீழ்

கருத்திட்டங்களைப் பதிவு செய்தல் மற்றும் சான்றுபடுத்தப்பட்ட உமிழ்வை குறைத்தல் (CER) ஆகியவற்றுக்கான சான்றிதழ் வெளியிடப்படுவதை அங்கீகரித்தல் மற்றும் உறுதிப்படுத்தும் செயற்பாடுகளுக்கு இட வசதிகள் ஏற்பாடு செய்யப்படும். அவ்வாறே, வலுச் சக்தி கணக்காய்வின் கீழ் துறை சார் நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களின் ஊடாக வலுச் சக்தி கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு அது சுற்றாடலுடன் தொடர்புபடும் விதம் தொடர்பாக விளக்கப்படுத்தி அதற்கென அந் நிறுவனங்கள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் பரிந்துறைக்கப்பட்டு அவை ஊக்குவிக்கப்படும். காபன் குறை பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொருட்டு தீர்மானமெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவம் வழங்குவதும், மேலும் தேசிய பசுமை அறிக்கையிடல் தொகுதி (GR) தொடர்பாக மதியுறை சேவைகளை வழங்குவதும் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் பல்வேறு சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான கருத்திட்டங்கள் மற்றும் நிதியங்கள் முகாமைத்துவப்படுத்தப்படுகின்றன. உலகலாவிய சுற்றாடல் வசதிகள் நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற நவீன உயிரியல் வலுச் சக்தி தொழில்நுட்ப கருத்திட்டங்களாக,

- பசுமை லங்கா
- தேசிய இயைபாக்கத் திட்டம்
- எதிர்ப்பார் தேசிய ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பை அறிமுகப்படுத்தலாம்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி, தேசிய காலநிலைக்கு முகங் கொடுக்கும் திறன் தொடர்பான வழிகாட்டியாகவும் செயற்படுகின்றது. அவ்வாறே, முழு மொத்த குடி மக்களுக்கும் காலநிலை செயற்பாட்டின் பல் வகைமையைக் குறைக்கும் செயற்பாட்டிலிருந்து இயைபாக்கமடையும் செயற்பாடு வரை கம்பனியினால் வழங்கப்படுகின்ற சேவைகள் பரந்துபட்டவையாகக் காணப்படுகின்றன. இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் தலையாய செயற் பணிகளாக சுற்றாடல் நிபுணத்துவம் தொடர்பான வாடிக்கையாளர்களின் எதிர்ப்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் பொருட்டு அவ் இயக்கத்தினால் கருத்திட்டங்கள் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கப்படுகின்றது. அவ்வாறே, காலநிலை சார்ந்த சவால்களுக்கு எதிராக இலங்கை அரசு மற்றும் தனியார்ப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்கும் உதவி வழங்குவதன் மூலம் மிக முக்கியமான பங்களிப்பை வ்ழங்கிய வண்ணமுள்ளது.

2021 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக கம்பனியினால் பசுமை வீட்டு வாயு உமிழ்வை குறைக்கும் பொருட்டு சந்தையிலுள்ள பெயர் பெற்ற நிறுவனங்களுக்கு பசுமை வீட்டு உறுதிப்படுத்துகை சான்றிதழ்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒரு சில சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், அவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

காகில்ஸ் தனியார்
நிறுவனத்திற்கு
பசுமை வீட்டு வாயு
உறுதிப்படுத்துகை
பிரசுரிப்பு
கையளிக்கப்படுதல்

காகில்ஸ் தனியார்
நிறுவனத்திற்கு
பசுமை வீட்டு
வாயு
உறுதிப்படுத்துகை
க பிரசுரிப்பு
கையளிக்கப்படுத
ல்

றெக்ஸ்ரிப் தனியார் நிறுவனத்திற்கு பசுமை வீட்டு வாயு உமிழ்வு உறுதிப்படுத்துகை பிரசுரிப்பு கையளிக்கப்படுதல்

அமசன் டிரேடின் தனியார் நிறுவனத்திற்கு பசுமை வீட்டு வாயு உமிழ்வு உறுதிப்படுத்துகை பிரசுரிப்பு கையளிக்கப்படுதல்

பகவந்தலாவ தேயிலைத் தோட்ட தனியார் நிறுவனத்திற்கு பசுமை வீட்டு வாயு உமிழ்வு உறுதிப்படுத்துகை பிரசுரிப்பு கையளிக்கப்படுதல்

03. நிறுவனத்தின் பயணப் போக்கு

2008

சுற்றாடல் அமைச்சின் கீழ் இலங்கை காபன் நிதியத்தை நிலை நாட்டுதல்.

2010

சுத்தப்படுத்துகை அபிவிருத்தி பொறிமுறை கருத்திட்டத்தை ஆரம்பித்தல்.

2013

இலங்கை காபன் கடன் பிரேரிப்பு செயன் முறையின் கீழ் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்.
காலநிலை சார் கைத்தொழில்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக தன்னியக்க பசுமை வீட்டு வாயு அறிக்கையிடும் தராதரங்கள் மற்றும் தேவைகளை அறிமுகப்படுத்துதல்.

2016

இலங்கை காலநிலை நிதியம் தனியார் (கம்பனி) எனும் பெயரில் வர்த்தகப் பெயரை மாற்றியமைத்தல்.

2016

இலங்கை காபன் தராதரத்தின் செயற்பாட்டுப் பொறிமுறையை மீள் கட்டமைத்தல்.

2016

இலங்கை தராதர அங்கீகார சபையிடமிருந்து சபையினால் ISO 10265 எனும் தராதர அங்கீகார சான்றிதழை பெற்றுக் கொள்ளுதல்.

2018

காலநிலை மாற்றங்கள் தொடர்பான மூன்றாவது தேசிய தொடர்பாடல் செயற்பாட்டிற்கென தேசிய பசுமை வீட்டு வாயுக்களை கணிப்பிடுதல் மற்றும் ஆவணப்படுத்தும் பொருட்டு மத்திய நிலையமாக செயற்படுதல்.

2020

நிகர பூச்சிய வலுச் சக்தியை உறுதிப்படுத்தும் மற்றும் காபன் நேரொத்த தொகுதியை அறிமுகப்படுத்துதல்.

20. சேவைகள்

பசுமை வீட்டு வாயு உறுதிப்படுத்துகை (ISO 14064, ISO 14067)

இலங்கை காபன் கடன் பரிந்துறை திட்டம்

தூய்மை அபிவிருத்திப் பொறிமுறை

நிகர பூச்சிய (Net Zero Energy) வலுச் சக்தி சான்றுபடுத்துகை

காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை (Climate Positive Certification))

மதியுறை சேவைகள்

கருத்திட்ட மற்றும் நிதி முகாமைத்துவம்

04. சேவைகள்

பேண்தகு சுற்றுச் சூழலை உறுவமைக்கும் பொருட்டு முன்னெடுக்கப்படுகின்ற கருத்திட்டங்களின் உறுதித் தன்மை மற்றும் அங்கீகாரமாக்குதல் மற்றும் மதியுறை சேவைகளை செயற்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. அதன் பிரகாரம், நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள பிரதானமான சேவைகள் பின்வருமாறு,

- பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு (ISO , 41041 ISO)41041
- இலங்கை காபன் கடன் பிரேரணைத் திட்டம் (SLCCS)
- தூய்மை அபிவிருத்திப் பொறிமுறை (CDM)
- நிகர பூச்சிய (Net Zero Energy) வலுச் சக்தி சான்றுபடுத்துகை
- காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை (Climate Positive Certification)
- மதியுறை சேவைகள்
- கருத்திட்டங்கள் மற்றும் நிதி முகாமைத்துவக் கருத்திட்டங்களின் அறிமுகம்

4.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் அரச மற்றும் தனியார்ப் பிரிவு நிறுவனங்களுக்கு உள் நாட்டு ரீதியாகவும், வெளி நாட்டு ரீதியாகவும் ISO 14064–1 :2018 மற்றும் ISO 14067 :2018 ஆகிய ஒத்தியல்பு சான்றிதழ்கள் கையளிக்கப்படுகின்றன. அந் நிறுவனங்களினால் கணிப்பிடப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வை சரி பார்த்த பிற்பாடு அச் சான்றிதழ்கள் கையளிக்கப்படுகின்றன. இலங்கை தராதர அங்கீகார சபையினால் மேற்குறித்த சரி பார்ப்பு செயற்பாடு தொடர்பாக நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பசுமை வீட்டு வாயு உமிழ்வை கணிப்பிடும் செயற்பாடுகள் வருடாந்தம் முன்னெடுக்கப்படுவதுடன், மூன்றாவது பங்குதார சரி பார்ப்பு செயற்பாட்டின் ஊடாக அந் நிறுவனங்களுடன் தொடர்புடைய தகவல்களுக்கு பெறுமதி கையளிக்கப்படுகின்றது. இதன் பிரகாரம், 2021 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு பிரிவிற்கு 20 கருத்திட்ட இலக்குகள் கையளிக்கப்பட்டிருப்பினும், அவ் வருட கால கட்டத்தில் ஏற்பட்ட உலகலாவிய தொற்று நோய் நிலை அவ் இலக்குகளை நோக்கி நகரும் பயணத்திற்கு தங்கு தடையாகவமைந்துள்ளது. எனினும், நிகழ் நிலை வழி முறையின் ஊடாக சரி பார்ப்பு செயற்பாடுகள் தொடர்பாகத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதன் விருத்தி 2022 ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

4.1.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்புப் பிரிவின் வருடாந்த விருத்தி - 2021

இலக்கம்	கருத்திட்டம்	விருத்தி
பசுமை வீட்டு வாயு உமிழ்வுக் கூற்றின் உறுதிப்படுத்துகை - நிறுவன ரீதியாக		
01	சிட்டிசன் டிவொலப்மன்ட் நிதி நிறுவனம் (CDB)	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
02	ஈ பீ கிரீசி அண்ட் கோபரேஷன்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
03	அமசன் டிரேடின் (தனியார்) நிறுவனம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
04	மாஸ் ஹோல்டின் மாஸ் கபிட்டல் (தனியார்) நிறுவனம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
05	மாஸ் ஹோல்டின் திரீஷெல் பெப்ரிக் (தனியார்) நிறுவனம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
06	மாஸ் ஹோல்டின் ஸ்திரீவ்லைன் (தனியார்) நிறுவனம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
07	வரையறுக்கப்பட்ட கொத்மலே பால் உற்பத்தி தனியார் நிறுவனம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
08	ஹொரன ப்ளாண்டேஷன் PLC	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
09	கொமர்ஷல் வங்கி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
10	அஷ்ரொப் வைத்தியசாலை அக்கரைப்பற்று	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
11	இலங்கை புகையிலை கம்பனி	விலை மதிப்பீடு - ஆரம்ப விலை மதிப்பீடு
செயற்பட்ட வண்ணமுள்ள கருத்திட்டங்கள்		
01	**EMJAY** இண்டர்னஷனல் (தனியார்) கம்பனி	**50%** செய்யப்பட்டிருந்தது
02	தலவாக்கலை ரீ எஸ்ரேட்	**30%** செய்யப்பட்டிருந்தது
03	வரையறுக்கப்பட்ட காகில்ஸ் புட்ஸ் கம்பனி	**20%** செய்யப்பட்டிருந்தது
04	நோர் லங்கா தனியார் கம்பனி	**80%** செய்யப்பட்டிருந்தது
05	அல்பிட்டிய பெருந்தோட்ட PLC	**80%** செய்யப்பட்டிருந்தது
06	UNIDIL ஒக்சிஜன் PLC	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது

07	வரையறுக்கப்பட்ட காகில்ஸ் கொலிட்டி புட்ஸ் தனியார் கம்பனி	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது
08	வரையறுக்கப்பட்ட காகில்ஸ் கொலிட்டி கன்பெனரீஸ் தனியார் நிறுவனம்	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது
09	போட்பெக் தனியார் கம்பனி	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது
10	ஸ்கேன்வெல் லொஜிஸ்டிக் தனியார் கம்பனி	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது
11	சேலைக் தனியார் கம்பனி	**20%** செய்யப்பட்டிருந்தது
12	ரெக்ஸ்ரூப் தனியாட் கம்பனி	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது
13	ஹட்டன் நஷனல் வங்கி	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது
14	இலங்கை வங்கி	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது
15	செலிங்கோ லைப் இன்ஷுவரன்ஸ் கம்பனி	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது
16	மத்திய சுற்றாடல் அதிகார சபை	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது
17	நெஸ்லே லங்கா PLC	ஒப்பந்த நிலையில் காணப்பட்டது

4.2 இலங்கை காபன் கடன் பிரேரணை திட்டம் (SLCCS)

இலங்கை காபன் கடன் பிரேரணை திட்டம் எனப்படுவது, இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றப் பிரிவின் நேரடியான கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தேசிய பசுமை வட்டு வாயு கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் மற்றும் சரி பார்க்கும் நிகழ்ச்சித் திட்டமாகக் காணப்படுகின்றது. இப் பிரேரணை திட்டத்தின் மூலம் இலங்கையில் செயற்படக் கூடிய தகைமை பெற்ற காபன் முகாமைத்துவக் கருத்திட்டங்கள் பதிவு செய்யப்படுவதுடன், எதிர்ப்பார் பங்குதாரிகளுக்கு தரமுயர்ந்த சேவையை உறுதிப்படுத்திய இலங்கையின் பெயரீட்டை சான்றுபடுத்திய உமிழ்வு குறைப்பு (SCER) வெளியிடப்படுகின்றது.

2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இலங்கை காபன் கடன் பிரேரணை திட்டத்தின் கீழ் ஐந்து புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி கருத்திட்டங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

4.2.1. இலங்கை காபன் கடன் பரிந்துறை திட்டத்தின் வருடாந்த விருத்தி

	கருத்திட்டம்	விருத்தி
01	NWSDB சூரிய வலுக் கருத்திட்டம்	பூர்த்தியடைந்துள்ளது
02	பகவந்தலாவ சூரிய தொகுதிக் கருத்திட்டம்	பூர்த்தியடைந்துள்ளது

4.3 தூய்மை விருத்திப் பொறிமுறை (CDM)

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் ஊடாக பசுமை வீட்டு வாயு உமிழ்வை குறைப்பதற்கான தூய்மை பொறிமுறையைப் பயன்படுத்துவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும், இட வசதிகளை ஏற்பாடு செய்யும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்டக கூட்டிணைப்பின் (UNFCCC) சுத்தப்படுத்துகை விருத்தி பொறிமுறையின் (CDM) கீழ் கருத்திட்டங்களை பதிவு செய்தல் மற்றும் சான்றுபடுத்தப்பட்ட வாயு உமிழ்வைக் குறைத்தல் (CER) சான்றிதழை வெளியிடும் பொருட்டு சான்றுபடுத்துதல் மற்றும் சரி பார்க்கை செயற்பாடுகளுடன் தொடர்புடைய வசதிகள் ஒழுங்கு செய்யப்படும். மேலும், இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் கருத்திட்டத் திட்டங்கள் தொடர்பான ஆவணம் (PDD) மற்றும் மேற்பார்வை அறிக்கை (MR) ஆகியவற்றின் தயாரிப்பு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

4.3.1 தூய்மை அபிவிருத்தி பொறிமுறைக் கருத்திட்டங்களின் வருடாந்த விருத்தி

01	இலங்கையிலுள்ள சிறு அளவிலான நீர் மின்வலு நிலையங்களை தூய்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
	(அ) காபன் வைப்பிலிடுகை காலப் பகுதியை புதுப்பித்தல்	
	(ஆ) சான்றுபடுத்தப்பட்ட உமிழ்வை குறைக்கும் (CER) மொத்த எண்ணிக்கையை (74, 147 t CO_2e) வெளியிடுதல்	
	(i) புதலாவத்த சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம்	ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்டக இணக்கப்பாட்டுக்கு (UNFCCC) மேற்பார்வை
	(ii)	

	(iii) தம்புலு ஒய சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம்	அறிக்கை (MR) முன் வைக்கப்பட்டுள்ளது.
	(iv)	
	(v) கோமலே ஒய சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம்	

4.4 நிகர பூச்சிய வலுச் சக்தி சான்றுபடுத்துகை (Net Zero Energy)

நிகர பூச்சிய வலுச் சக்தி கோட்பாடு எனப்படுவது, வலுக் சக்தி பயன்பாட்டின் மூலம் வலுச் சக்தி பாதுகாப்பின் வினைத் திறன் மற்றும் இடவமைப்பு புதுப்பிக்கத்தக்க தோற்றுவாய் ஆகிய செயற்பாடுகள் 100% பூர்த்தி செய்யப்பட்ட வலுச் சக்தி பயன்பாடாகக் காணப்படுகின்றது. வலுச் சக்தியை சான்றுபடுத்தும் தொகுதி, காபன் உமிழ்வைக் குறைத்தல், வலுச் சக்தி வினைத் திறன் தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல் மற்றும் நிறுவன ரீதியாக விளம்பரப்படுத்தும் நோக்கில் இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் மேம்படுத்தப்பட்ட கோட்பாடாகக் காணப்படுகின்றது.

புதுப்பிக்க முடியாத வலுச் சக்தி பயன்பாட்டைத் தாண்டிய புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி உற்பத்தி கருத்திட்டங்களை முன்னெடுக்கின்ற நிறுவனங்கள் நிகர பூஜ்ஜிய வலுச் சக்தியை சான்றுபடுத்த வேண்டிய தேவை தொடர்பாகத் தகைமை பெறுகின்றன. இச் சான்றுபடுத்துகையின் பலன்கள் முறையே,

- வலுச் சக்தி பயன்பாட்டின் மூலம் ஏற்படக் கூடிய பசுமை வீட்டு வாயு உமிழ்வை, புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் ஊடாக குறைக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- நிறுவனங்களிற்கு, முதலீட்டாளர்களுக்கு மற்றும் பாவனையாளர்களுக்கு சுற்றாடல் நேயமிக்க கருத்திட்டங்களில் ஈடுபடுவதற்கு இட வசதிகளை ஏற்பாடு செய்தல்.
- வலுச் சக்தி பயன்பாடு குறித்த மட்டத்தைத் தாண்டிய வண்ணம் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி உற்பத்தியில் ஈடுபடுகின்ற நிறுவனங்களிற்கு, அவர்களது மேலதிக வலுச் சக்தியை விற்பனை செய்து மேலதிக வருமானத்தை ஈட்டக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டை விருத்தி செய்வதன் ஊடாக உற்பத்தி செலவைக் குறைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்தல் மற்றும் அந் நிறுவனங்களுக்கு நீண்ட கால போட்டித் தன்மையுள்ள சந்தையில் தங்கியிருக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- உயிரியல் எரிபொருளின் கீழ் தங்கியுள்ள வலுச் சக்தி, மிக விரைவாக மாற்றமடையக் கூடிய விலை மற்றும் விநியோகிப்புடன் கூட்டிணைந்த சந்தை வசதியுள்ள வலுச் சக்தியின் கீழ் தங்கியிருக்கும் செயற்பாடு குறைவடைதல்.

- நாட்டினுள் விருத்தி தொடர்பாக போட்டித் தன்மையுள்ள சுற்றாடல் உறுவாக்கப்படுதல் மற்றும் நீண்ட கால புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி கைத்தொழில் விஸ்தரிப்பு அதிகரித்தல்.

4.5 காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை)Climate Positive Certification)

காலநிலை சாதகமான சான்றுபடுத்துகையின் ஊடாக திடமான பொருளாதார விருத்தியை பேணுவதற்கும், குறிப்பிடத்தக்களவான உமிழ்வைக் குறைப்பதன் ஊடாக நீண்ட கால நன்னெறி மிக்க நிலைப்பாட்டை எட்டுவதற்கும் வழிகாட்டப்படுகின்றது. உற்பத்தி, சேவைகள் மற்றும் இயக்கங்களின் வருடாந்த பசுமை வீட்டு வாயு உமிழ்வை உறுதிப்படுத்துவதன் ஊடாக அவற்றின் பசுமை வீட்டு வாயு உமிழ்வு தொடர்பான பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது. மேலும். காலநிலை சாதகமான சான்றிதழை பெற்றுக் கொள்ளும் பொருட்டு நிறுவனத்தின் முன்னெடுப்பு செயற்பாடுகளின் உமிழ்வு தொடர்பாக வருடாந்தம் அதிகளவில் கவனம் செலுத்துவதன் ஊடாக அவர்களது வருடாந்த பசுமை வீட்டு வாயு உமிழ்வு மற்றும் சரி செய்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணம் மேலதிக அளவை விற்பனை செய்யக் கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது.

இச் சான்றுபடுத்துகை தொடர்பில் தேவையான பிரதானமான இசைவாக்கங்கள்

- எதிர்ப்பார் அளவியல் ரீதியான பசுமை வீட்டு வாயு உமிழ்வு சான்றிதழ் (ஏற்றுக் கொள்ளப்பட்ட மூன்றாம் தரப்பினரினால் சரி செய்யப்பட்ட).
- எதிர்ப்பார் தரப்பினரினால் காபன் முகாமைத்துவ கருத்திட்டம் விருத்தி செய்யப்படுதல் மற்றும் அவர்களது உமிழ்வைக் குறிக்கும் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச வாயு உமிழ்வு கருத்திட்டமயமாக்கம்.
- சான்றுபடுத்தப்பட்ட கருத்திட்டங்களை தன்னிச்சையாக செயற்படுத்த வேண்டியேற்படுதல்.
- எதிர்ப்பார் தரப்பினர் அவர்களது பசுமை வீட்டு வாயு உமிழ்வை மேலதிக கடனை காபன் தீர்த்தல் செயற்பாட்டுடன் கூட்டிணைந்த வகையில் முன்னெடுக்க வேண்டியுள்ளது.
- காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை உரித்தான திடல்கள்
- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி மேம்பாடு
- புதிய வன வளர்ப்பு மற்றும் மீள் வன வளர்ப்பு
- வினைத் திறன் மிக்க வலுச் சக்தி மற்றும் பாதுகாப்பு
- வீண் விரயத்தை குறைத்தல், மீள் பயன்பாடு மற்றும் மீள் சுழற்சி

4.6மதியுறை சேவைகள்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் காபன் குறை பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு வாடிக்கைகளர்களுக்கு தீர்மானமெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களும், தலைமைத்துவமும் வகிக்கப்படுகின்றது. மேலும், தேசிய பசுமை அறிக்கையிடல் தொகுதியில் பதிவு செய்வதற்கும் தேவையான மதியுறை சேவைகள் வழங்கப்படுகின்றன.

4.7 கருத்திட்ட நிதி முகாமைத்துவம்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியினால் பல்வேறு சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றங்களுடன் தொடர்புடைய கருத்திட்டங்கள் மற்றும் கருத்திட்ட நிதியங்கள் முகாமைத்துவப்படுத்தப்படுகின்றன. அத்தகைய அடிப்படையில் அமையப் பெற்ற ஒரு சில கருத்திட்டங்கள் பின்வருமாறு,

- உலகலாவிய சுற்றாடல் வசதிகள் நிதியத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்ட நவீன உயிரியல் வலுச் சக்தி தொழில்நுட்பக் கருத்திட்டங்கள்
- பசுமை இலங்கை கருத்திட்டம்
- தேசிய இயைபாக்கத் திட்டம்
- எதிர்ப்பார் தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு
- இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் நிபுணத்துவ துறைகள்
- புதிப்பிக்கத்தக்க வலுச் சக்திகள்
- இயைபாக்கம் அல்லது குறைப்பதுடன் (Adaptation and Mitigation) தொடர்புடைய மதியுறைகளை வழங்குதல்
- சுற்றாடல் பொறியியலாக்கம்
- MRV தொகுதிகளின் மேம்படுத்துகை
- குடிகளின் மேம்படுத்துகை
- சமூக ரீதியான ஆராய்ச்சிகள்

05. எதிர்ப்பார் நிதி இலக்கு - 2021



26. நிதி விருத்தி

2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த படியான நிதி நிலைமைக் கூற்று

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி					
2021 டிசம்பர் 31					
		2021		2020	
	குறிப்புகள்	ரூபா		ரூபா	
சொத்துக்கள்					
நடைமுறையற்ற சொத்துக்கள்					
சொத்துக்கள் கட்டமைப்புகள் மற்றும் உபகரணங்கள்	14	97,656.25		-	
நிலையான வைப்புகள்					
நிலையான வைப்புகள்	9	10,000,000.00		10,000,000.00	
நடைமுறை சொத்துக்கள்					
திரைச் சீலைகள்		-		-	
வணிக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய சொத்துக்கள்	8	3,736,125.90		2,845,250.00	
பணம் மற்றும் பணத்துக்குச் சமமான	10	53,949.27		71,017.00	
		3,790,075.17		2,916,267.00	
மொத்த சொத்துக்கள்		13,887,731.42		12,916,267.00	
உரிமைகள் மற்றும் பொறுப்புகள்					
உரிமைகள்					
கூறப்பட்ட மூலதம்	11	25,000,010.00		25,000,010.00	
தங்க வைத்த மூலதனம்		(14,149,443.19)		(13,643,332.00)	
		10,850,566.81		11,356,678.00	
நடைமுறையற்ற பொறுப்புகள்					
நடைமுறை பொறுப்புகள்					
திரட்டு கொடுப்பனவுகள்	12	3,037,164.61		1,559,590.00	
மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புகள்		13,887,731.42		12,916,268.00	

மேற்குறித்த நிதி நிலைமைக் கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியிருப்பதுடன், நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இ ந் நிதிக் கூற்றுக்களில் பக்க இலக்கம் …… முதல் …. வரை சமர்ப்பிக்கப்படுவதுடன், அவை இந் நிதிக் கூற்றுக்களில் ஒருங்கிணைந்த பகுதியொன்றாக வெளிக் காட்டப்பட்டுள்ளன.

2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இந் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக நான் சான்றுபடுத்துகின்றேன்.

………………………	………………………	………………………
முகாமையாளர் - ம.வ மற்றும் நிதி	பிரதம நிறைவேற்று அதிகாரி	தலைவர்

2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம், இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன் வைக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபை வசப்படும்.

சபை சார்பாக அனுமதிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

……………………	……………………
பணிப்பாளர்	பணிப்பாளர்

2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியிலிருந்த உரிமை மாற்றக் கூற்று

	குறிப்பு	தங்க வைத்தல் இலாபம் / (நட்டம்) ரூபா	தெரிவிக்கப்பட்ட மூலதனம் ரூபா	மொத்தம் ரூபா
2021 ஜனவரி 01 ஆரம்ப மீதி		(12,872,075.56)	25,000,010.00	11,356,678.24
ஆண்டு காலப் பகுதிக்கான இலாபம் / (நட்டம்)		(771,256.20)		(771,256.20)
2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி (இறுதி மீதி)		(13,643,331.76)	25,000,010.00	10,585,422.04
2022 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி		(13,643,331.76)	25,000,010.00	10,585,422.04
வருடாந்த இலாபம் / (நட்டம்)	13	196,388.57		
முன்னைய ஆண்டின் ஒப்பீடு		(702,500.00)		
2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி		(14,149,443.19)	25,000,010.00	10,585,422.04

2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியோட்டக் கூற்று

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி		
நிதியோட்டக் கூற்று		
2021 டிசம்பர் 31		
	2021	2020
	ரூபா	ரூபா
நிதியோட்டக் கூற்று - முன்னெடுப்பு செயற்பாடுகள்		
வரி செலுத்துவதற்கு முன்பான நிகர இலாபம் / (நட்டம்)	196,388.57	(771,256.20)
ஒப்பீடுகள்		
தேய்மானம்	27,343.75	9,679.04
முன்னைய ஆண்டின் ஒப்பீடுகள்	(702,500.00)	0
	(478,767.68)	(761,577.16)
செயற்பாட்டு மூலதனத்தின் மாறுபாடுகள்		
அதிகரிப்பு / (குறைப்பு) மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய	(890,875.90)	(972,897.40)
அதிகரிப்பு / (குறைப்பு) நிதி முகாமைத்துவம்	0	(1,193,000.00)
அதிகரிப்பு / (குறைப்பு) ஏனைய செலுத்த வேண்டியவை	1,477,574.61	137,599.67
	107,931.03	(2,028,297.73)
நிகர நிதியோட்டம் - முன்னெடுப்பு செயற்பாடுகளின் வாயிலாக	107,931.03	(2,789,874.89)
நிதியோட்டக் கூற்று - முதலீட்டு செயற்பாடுகள்		
நிலையான சொத்துக்களின் கொள்வனவு	(125,000.00)	0
நிகர நிதியோட்டம் - முதலீட்டு செயற்பாடுகள்	(125,000.00)	0
அதிகரிப்பு / (குறைப்பு) பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	(17,068.97)	(2,789,874.89)
வருட ஆரம்பத்தில் காணப்பட்ட பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	71,017.45	12,860,892.34
வருட இறுதியில் காணப்பட்ட பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	53,949.27	10,071,017.45

2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருட காலப் பகுதியில் இருந்தவாரான விபரமான வருமானக் கூற்று

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி				
விபரமான வருமானக் கூற்று				
2021 டிசம்பர் 31				
		2021		2020
	குறிப்புகள்	ரூபா		ரூபா
வருமானம்	1	7,124,960.79		4,172,827.00
கருத்திட்டங்களுடன் தொடர்புடைய நேரடி செலவு	2	(743,406.21)		(310,222.22)
நிகர இலாபம்		6,381,554.58		3,862,604.78
ஏனைய வருமானங்கள்	3	587,191.78		864,864.64
		6,968,746.36		4,727,469.42
குறைப்பு :				
தனிப்பட்ட செலவு	4	5,718,801.87		4,779,063.16
நிர்வாக செலவு	5	1,041,740.13		550,421.97
விற்பனை மற்றும் விநியோகிப்பு செலவு	6	8,500.79		4,160.49
நிதி மற்றும் ஏனைய செலவுகள்	7	3,315.00		165,080.00
		6,772,357.79		5,498,725.62
இலாபம் / (நட்டம்) வரிக்கு முந்திய		196,388.57		(771,256.20)
வரி				-
இலாபம் / (நட்டம்) வரிக்கு பிற்பாடு		196,388.57		(771,256.20)
ஏனைய விஸ்தீரணமான வருமானம்				-
மொத்த விஸ்தீரணமான வருமானம்		196,388.57		(771,256.20)

2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிய நிதிக் கூற்று தொடர்பான விபரமான குறிப்பு

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி				
2021 டிசம்பர் 31				
நிதிக் கூற்றுக்கள் தொடர்பான விபரமான குறிப்புகள்				
		2021		2020
1	வருமானம்	ரூபா		ரூபா
	பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு வருமானம்	6,537,307.75		2,283,157.00
	காலநிலை சாதகமான சான்றுபடுத்துகை	31,000.00		-
	நிகர பூஜ்ஜிய சான்றிதழ் கருத்திட்டத்தின் சான்றுபடுத்துகை வருமானம்	36,000.00		-
	மதியுறை சேவை வருமானம்	72,636.04		533,000.00
	பயிற்சி மற்றும் பணிப் பட்டறை வருமானம்	186,000.00		-
	இலங்கை காபன் கடன் பரிந்துறை கருத்திட்டத்தின் வருமானம்	262,017.00		215,670.00
	காபன் பூஜ்ஜிய கருத்திட்ட வருமானம்	-		200,000.00
	கருத்திட்ட முகாமைத்துவ வருமானம்	-		941,000.00
		7,124,960.79		4,172,827.00
2	கருத்திட்டங்கள் தொடர்பான நேரடி செலவு			
	கருத்திட்ட செலவு - இலங்கை தராதர அங்கீகார சபைக்கான செலவு	265,000.00		150,000.00
	கருத்திட்ட செலவு - இலங்கை காபன் கடன் பரிந்துறை திட்டம்	82,420.79		-
	பயிற்சி மற்றும் பணிப் பட்டறை செலவு	109,800.00		-
	கருத்திட்ட செலவு - காபன் பாதச் சுவடிகள்	153,925.42		92,222.00
	தூய்மை விருத்தி பொறிமுறை தொடர்பான செலவு	114,260.00		-
	நீர் பாதச் சுவடி செலவு	18,000.00		-
	மதியுறை தொடர்பான செலவு	-		68,000.00
		743,406.21		310,222.00
3	பிற வருமானங்கள்			
	வட்டி வருமானம்	587,191.78		864,864.00
		587,191.78		864,864.00
4	தனிப்பட்ட செலவு			
	பணிக் குழுவிற்கான சம்பளம்	3,707,500.00		4,060,400.00
	செலவு - ஊழியர் சேமலாப நிதியம்	444,900.00		434,400.00
	செலவு - ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	111,225.00		108,600.00
	வாழ்க்கை செலவு	694,200.00		-

	சம்பளக் கொடுப்பனவு	221,459.92		134,349.16
	விசேட கொடுப்பனவு	300,000.00		-
	எரிபொருள் கொடுப்பனவு	-		19,600.00
	பணி நன்கொடை செலவு	165,000.00		-
	ஊழியர் நலன்புரி	27,016.95		21,714.00
	தொலைபேசிக் கொடுப்பனவு	47,500.00		-
		5,718,801.87		4,779,063.16
		2021		2020
		රුපියල්		රුපියල්
5	நிர்வாக செலவுகள்			
	செயலாளர் கட்டணம்	172,801.39		58,971.00
	சட்டக் கட்டணம்	25,000.00		
	காப்புறுதிக் கட்டணம்	61,159.65		56,880.00
	தொலைபேசிக் கட்டணம்	132,838.48		147,904.00
	இணைய தளத்திற்கான செலவுகள்	10,500.00		20,150.00
	தபால் மற்றும் முத்திரைக் கட்டணம்	5,745.00		-
	பணிப்பாளர் சபைக் கொடுப்பனவு	90,000.00		30,000.00
	எரிபொருள் மற்றும் வாகன பராமரிப்பு செலவு	134,274.00		203,945.00
	கணினி மற்றும் அச்சிடல் இயந்திர பராமரிப்பு செலவு	49,650.00		19,960.00
	கணக்காய்வுக் கட்டணம்	185,000.00		-
	அச்சிடல் மற்றும் காகிதாதிகள் செலவு	44,550.00		850.00
	தேய்மானம்	27,343.75		9,679.00
	பயணச் செலவுகள்	5,544.73		2,082.93
	ஏனைய செலவுகள்	22,426.00		-
	வர்த்தக அறிவித்தல் செலவுகள்	59,184.00		-
	ஊழியர் சேமலாப நிதியம் - தண்டப் பணம்	15,723.13		-
		1,041,740.13		550,421.93
6	விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள்			
	விளம்பரச் செலவுகள்	8,500.79		4,160.00
		8,500.79		4,160.00
7	நிதி மற்றும் ஏனைய செலவுகள்			
	ஊழியர் சேமலாப நிதியம் - தண்டப் பணம்	-		1,890.00
	ஏனைய செலவுகள்	-		159,575.00
	வங்கிக் கட்டணம்	3,315.00		3,615.00
		3,315.00		165,080.00

8	கிடைக்க வேண்டியவை			
	கிடைக்க வேண்டிய கடன் மீதி	3,422,354.90		2,662,479.00
	பண முற்பணம்	313,771.00		182,771.00
		3,736,125.90		2,845,250.00
9	நிலையான வைப்புகள்			
	நிலையான வைப்பு - இலங்கை வங்கி	10,000,000.00		10,000,000.00
		10,000,000.00		10,000,000.00
10	பணம் மற்றும் பணத்துக்குச் சமமானவை			
	வங்கி மீதி	53,949.27		71,017.00
		53,949.27		71,017.00
11	கூறப்பட்ட மூலதனம்			
	கூறப்பட்ட மூலதனம்	25,000,010.00		25,000,010.00
		25,000,010.00		25,000,010.00
12	செலுத்த வேண்டியவை			
	செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம்	1,395,803.01		945,303.00
	செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	150,361.60		138,287.00
	செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம்	260,000.00		150,000.00
	செலுத்த வேண்டிய ஈட்டல் வரி	326,000.00		326,000.00
	செலுத்த வேண்டிய பணி நன்கொடை	905,000.00		-
		3,037,164.61		1,559,590.00
13	முன்னைய ஆண்டின் ஒப்பீடு			
	பணி நன்கொடை	740,000.00		-
	கணக்காய்வுக் கட்டணம்	(37,500.00)		-
		702,500.00		

14	சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்		
14.1	கிரயம் / மதிப்பீடு			
		2021/1/1 ஆம் திகதிக்கு மீதி	மேலதிகம்	12/31/2021 ஆம் திகதிக்கு மீதி
		ரூபா	ரூபா	ரூபா
	அலுவலக உபகரணங்கள்			
	வளிப் பதனாக்கி	209,000.00		209,000.00
	பைண்டிங் உபகரணம்	7,000.00	-	7,000.00
	ஏனைய அலுவலக உபகரணங்கள்	55,000.00	-	55,000.00
	தளபாடங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள்			
	தளபாடங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள்	525,635.00	-	525,635.00
	வாகனங்கள்			
	மோட்டார் வாகனம்	3,100,000.00	-	3,100,000.00
	மோட்டார் சைக்கில்	199,640.00		199,640.00
	கணினி உதிரிப் பாகங்கள்			
	கணினி மற்றும் அச்சிடல் இயந்திரங்கள்	1,223,800.00	125,000.00	1,348,800.00
	மொத்த சொத்துக்கள்	5,320,075.00	125,000.00	5,445,075.00
14.2	முழு மொத்த தேய்மானம்			
		2021/1/1 ஆம் திகதிக்கு மீதி	தேய்மானம்	12/31/2021 ஆம் திகதிக்கு மீதி
		ரூபா	ரூபா	ரூபா
	அலுவலக உபகரணங்கள்			
	வளிப் பதனாக்கி	209,000.00	-	209,000.00
	பைண்டிங் உபகரணம்	7,000.00	-	7,000.00

	ஏனைய அலுவலக உபகரணங்கள்	55,000.00	-	55,000.00
	தளபாடங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள்			
	தளபாடங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள்	525,635.00	-	525,635.00
	வாகனங்கள்			
	மோட்டார் வாகனம்	3,100,000.00	-	3,100,000.00
	மோட்டார் சைக்கில்	199,640.00	-	199,640.00
	கணினி உதிரிப் பாகங்கள்			
	கணினி மற்றும் அச்சிடல் இயந்திரங்கள்	1,223,800.00	27,343.75	1,251,143.75
	மொத்த தேய்மானம்	5,320,075.00	27,343.75	5,347,418.75

கணக்காய்வு அறிக்கைகள்

தலைவர்,
இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனி

இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனியின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவை தொடர்பான 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அறிக்கை

மேற்குறித்த கணக்காய்வு அறிக்கை இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்/ டப்ளியு. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதி :

01. செயலாளர் - சுற்றாடல் அமைச்சு - தயவுடன் அறிந்து கொள்வதற்கு
02. செயலாளர் - நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு - தயவுடன் அறிந்து கொள்வதற்கு

தலைவர்,
இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனி

இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனியின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவை தொடர்பான 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அறிக்கை

---

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபப்பிராயம்**

இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனியின் 2021 டிசம்பர் 31 இன் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றக் கூற்று மற்றும் அன்றுடன் முடிவடைந்த வருட காலப் பகுதிக்கான நிதியோட்டக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள், சுருக்கமயமான மிக முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருட காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுக்கள் ஆகியன, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆவது ஏற்பாட்டுடன் திருத்தப்பட்டதாகக் கூறப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைப்பு சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புறையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கை எதிர்வரும் காலப் பகுதியில் பாராளுமன்றத்துக்கு முன் வைக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் எனும் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலமான தாக்கங்களைத் தவிர்த்து, கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த படியான நிதி நிலைமை மற்றும் அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றுகை மற்றும் நிதியோட்டம் ஆகியன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) கம்பனிக்கு உரித்தான பெறுமதி ரூபா 5,366,485 ஆன சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் வினைத் திறன் மிக்க ஆயுட் காலம் நிறைவடைந்திருப்பினும், கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டு காலப் பகுதியிலும் அச் சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதனடிப்படையில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் தொடர்பான கணக்கீட்டுத் தராதரம் 17 ஆவது பிரிவின் பந்தி இலக்கம் 17.1.9 இன் பிரகாரம் அச் சொத்துக்களின் வினைத் திறன் மிக்க வாழ் தகவு காலப் பகுதி சரியாக மதிப்பிடப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் ரூபா 2,500,000 ஆன கிரயமாக மதிப்பிடப்பட்ட இலக்கம் GG - 9396 ஐ உடைய கப் வண்டி கம்பனியினால் பயன்படுத்தப்பட்டாலும், சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கான கணக்கீட்டுத் தராதரம் 2 ஆவது பிரிவின் பந்தி இலக்கம் 19 இன் பிரகாரம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்தவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ், தொடர்புடைய சொத்து வெளிக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) KJ – 4483 மோட்டார் வாகனத்தின் வருடாந்த காப்புறுதித் தொகையாக ரூபா 43,873 ஆன பணத் தொகை 2021 ஜூலை 01 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதிலிருந்து 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியுடன் தொடர்புடையதான ரூபா 14,664 ஆன பணத் தொகை திரட்டு அடிப்படையில் கணக்குகளில் குறிப்பிடப்படாது கலந்தாலோசிக்கு ஆண்டில் செலவாக கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை தராதர அங்கீகார சபைக்கு (Accreditation Board) 2021 ஜூலை 01 ஆம் திகதி, 2021/2022 ஆம் ஆண்டு தொடர்பாக வருடாந்த தராதர அங்கீகாரம் தொடர்பான கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 150,000 ஆன மொத்த பணத் தொகையில் ரூபா 129,863 ஆன பணத் தொகை மாத்திரம் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு உரித்தானதாகக் காணப்பட்டாலும், அம் மொத்த பணத் தொகையும் கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் செலவாகக் கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(உ) கம்பனியின் அலுவலகத்தை 2023 ஆம் ஆண்டில் சுற்றாடல் அமைச்சு வலாகத்தில் நிலை நாட்டுவதற்கு முன் அரச மரக் கூட்டுத்தாபனத்தில் அலுவலகம் நிலை நாட்டப்பட்டிருப்பினும், 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்த வேண்டிய அலுவலக வாடகை ரூபா 1,415,849 ஆன தொகை மரக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக இதற்கென நிதியங்கள் ஒதுக்கப்படாதிருந்ததுடன், கணக்கீட்டுக் குறிப்புகளின் ஊடாகவும் அவை வெளிக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) காலநிலை மாற்றங்களைக் குறைக்கும் நடவடிக்கையான காபன் பாதச் சுவடி (Carbon Footprint) செயன் முறை தொடர்பாக, தேவையான சேவை வழங்குதல் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய வருமானமான ரூபா 248,482 ஆன தொகை செயற்படுத்துகை வருமானத்தின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. எனினும், இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்று கைச்சாடிடப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியினாலும் இச் சேவை வழங்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த விடயங்களின் பிரகாரம் கம்பனியினால் சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிக நடவடிக்கைகள் தொடர்பான கணக்கீட்டுத் தராதரம் 23 ஆவது பிரிவின் 23.14 வகுதிக்கு முரணாக வருமான கணக்குகளில் காட்டப்பட்டிருப்பதாகவும் கணக்காய்வின் மூலம் அவதானிக்கப்பட்டது.

(எ) 1958 இன் இலக்கம் 15 ஐ உடைய ஊழியர் சேமலாப நிதியம் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 16 ஆவது பிரிவின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய பங்களிப்புத் தொகையை செலுத்துவதில் ஏற்பட்ட தாமத நிலை காரணமாக ரூபா 259,600 ஆன பணத் தொகை தண்டப் பணமாக செலுத்த வேண்டியிருப்பினும், 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களின் வாயிலாகத் தொடர்புடைய தண்டப் பணம் அடையாளம் காணப்பட்டு கணக்குகளில் சுட்டிக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு

நிதியத்துக்குத் தொடர்புடைய பங்களிப்புத் தொகை தாமதமாக செலுத்தப்பட்டமையால் ரூபா 29,205 ஆன தண்டப் பணத்தை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கென நிதியங்கள் ஒதுக்கப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியுடன் தொடர்புடையதாக இரத்து செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்ட பற்றுச் சீட்டு 07 கணக்காய்வுக்கென முன் வைக்கப்படாதிருந்ததுடன், அப் பற்றுச் சீட்டை இரத்து செய்வதற்கான காரணம் கணக்காய்வுக்கு முன் வைக்கப்படவில்லை. கம்பனியினால் வருமான ஒன்று திரட்டல் மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாக சீரான உள்ளக கட்டுப்பாட்டு செயன் முறையொன்று நிலை நாட்டப்படாதிருந்ததுடன், அதன் பிரகாரம் கம்பனியினால் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த ரூபா 7,124,960 ஆன வருமானத்தின் உண்மைத் தன்மை தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

(ஐ) கலந்தாலோசிப்பு ஆண்டில் நிதியோட்டக் கூற்றினுள் குறித்துக் காட்டப்பட்டுள்ள 2020 ஆம் ஆண்டின் இறுதித் திகதிக்கு பணம் மற்றும் பணத்துக்குச் சமமானவற்றின் பெறுமதியாக 2020 கணக்காய்வு நிதிக் கூற்றுக்களில் ரூபா 10,071,017.45 குறிப்பிடப்பட்டிருப்பினும், 2021 ஆம் ஆண்டின் பணம் மற்றும் பணத்துக்குத் சமமானவற்றின் ஆரம்ப மீதி ரூபா 71,017.45 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஒ) நிதியோட்டக் கூற்றில் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கன முன்னெடுப்பு செயற்படுத்துகையின் ஊடாகத் தோற்றுவிக்கப்படுகின்ற நிகர நிதியோட்டத்தை கணிப்பிடுகையில் முன்னைய ஆண்டின் பிழைகள் சரி செய்யப்பட்டவையாக ரூபா 702,500 ஒப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கான கணக்கீட்டுத் தராதரங்களின் 10 ஆவது பிரிவின் 10.21 (அ) வகுதியின் பிரகாரம் முன்னைய ஆண்டின் பிழைகளை சரி செய்கையில் நிதிக் கூற்றில் முன்னைய ஆண்டுக்கான ஒப்பீட்டுத் தகவல்களை மீளவும் சரிப்படுத்தல்களாக முன் வைக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பினும், கம்பனியினால் 2020 ஆம் ஆண்டில் பிழைகளை சரி செய்வதுடன் தொடர்புடைய செலுத்த வேண்டிய பணி நன்கொடை மற்றும் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டண பெறுமானங்கள் சரி செய்யப்பட்டு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இல.கண.நிய) இசைவாக எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் இவ் அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **கம்பனியின்** 2021 **வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்**

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பிற்பாடு எனக்கு கையளிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்ற கம்பனியின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எனினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் கீழ் எடுத்துறைக்கப்பட்டுள்ளன. இவ் ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டியுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன், அது தொடர்பாக நான் எவ்விதத்திலும் சான்றுபடுத்துகையோ அல்லது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தையோ முன் வைக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுடன் தொடர்புடையதாக எனது பொறுப்பாக மேற்குறித்த அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தில் வாசித்தல் மற்றும் அத்தகைய அடிப்படையில் செயற்படுகையில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது ஏனைய விதமாக பெறப்பட்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்தாதிருக்கின்றதா என்பதைக் கருத்திலெடுப்பதாகவுள்ளது.

கம்பனியின் 2021 வருடாந்த அறிக்கையை வாசிக்கையில், அதன் பெறுமதி ரீதியான பிழைகள் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாக நான கருதுமிடத்து, சரிப்படுத்தல்கள் தொடர்பாக நிர்வகிக்கின்ற தரப்பினருடன் அவ் விடயங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டியுள்ளது. மேலும் சரி செய்யப்படாத பிழையாக குறிப்பிடப்பட்ட விடயங்கள் காணப்படுமாயின், அவற்றை அரசியலமைப்பின் 154 (6) சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் காலப் பகுதியில் என்னால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவம் மற்றும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிக செயற்பாடுகள் தொடர்பான கணக்கீட்டுத் தராதரங்களின் பிரகாரம் தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன் முறையைப் பரீட்சிக்கும் பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாகச் சீராக பதிவேடுகளையும், அறிக்கைகளையும் பராமரிக்க வேண்டியுள்ளது.

1.5 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர் தொழில் திரிபுகளை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன், அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங் கண்டு மதிப்பீடு செய்தல், அந்த

இடர்களை எதிர் கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல், மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத் தனம், வேண்டுமென்று விட்டி விடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டிபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற் திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பாகவும், குறிப்பிடத்தக்க ஐயப்பாடிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவுக்கு வந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவில் காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்க்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக் குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடை நிறுத்துவதற்கு ஏதுவாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட கணக்காய்வுக் கண்டறிவுகள், பிரதான உள்ளக நிர்வாகக் குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாகத் தரப்பினரை அறிவூட்டுகின்றேன்.

2. **ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் கண்காணிப்பு தேவைகள் தொடர்பான அறிக்கை**

2.1 2018 **இன் இலக்கம்** 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தினதும், 2007 இன் இலக்கம் 7 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் கீழும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் தொடர்பாக விசேட நிதியங்கள் உள்ளடங்குகின்றன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலமான தாக்கங்களைத் தவிர்த்து, 2007 இன் இலக்கம் 7 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் 163 (2) பிரிவிலும், 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவிலும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும், விளக்கங்களும் என்னால் பெறப்பட்டதுடன், எனது பரீட்சிப்பின் மூலம் அடையாளம் காணப்பட்ட விடயங்களின் பிரகாரம் கம்பனி கணக்காய்வு அறிக்கைகளை சீராகப் பேணியிருந்தது.

2.1.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவின் 1.2. (ஐ) மற்றும் 1.2. (ஓ) வரையான அவதானிப்புகளைத் தவிர்த்து கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசையக் கூடியதாகக் காணப்படுகின்றது.

2.1.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவின் கீழான 1.2 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர முன்னைய ஆண்டில் என்னால் முன் வைக்கப்பட்ட பரிந்துறைகள் முன் வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன் முறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சியங்களின் பிரகாரம் அவை போதியளவான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டமையால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன் வைப்பதற்குப் போதியளவான விடயங்கள் எனது கண்காணிப்பிற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கம்பனியின் நிர்வாக சபையின் ஏதாவதொரு அங்கத்தவரொருவருக்கு கம்பனியுடன் தொடர்புபட்டு ஏதாவதொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது எந்தவொரு பிற அடிப்படையிலும் சாதாரண வர்த்தக நிலைகளுக்குப் புறம்பாக தொடர்பு காணப்படுவதாக.

2.2.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர ஏதாவதொரு தொடர்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது கம்பனியின் நர்வாக சபையினால் வெளியிடப்பட்ட பிரிதொரு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு ஒத்திசையாகாத அடிப்படையில் செயற்பட்டிருப்பதாக.

சட்ட திட்டங்கள் / ஆணைகளினது குறிப்பு	அவதானிப்புகள்
(அ) 1980 இன் இலக்கம் 46 ஐ உடைய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16 (1) ஆவது பிரிவு	சேவை பிரேரிப்பாளரினால் ஒவ்வொரு மாதத்துடனும் தொடர்புடையதாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பு பணத் தொகை அடுத்த மாதம் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு சபைக்கு முன் வைக்க வேண்டியிருப்பினும், கம்பனியினால் பங்களிப்பு பணத் தொகையை செலுத்துவதில் ஏற்பட்ட தாமத நிலை காரணமாக கலந்தாலோசிப்பு ஆண்டில் ரூபா 15,723 ஆன அபராதத்தை செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ)	2017 இன் இலக்கம் 24 ஐ உடைய உள் நாட்டு வருமான சட்டத்தின் 120 (ஒ) பிரிவு	சேவை பிரேரிப்பாளரினால் ஊழியர்களிடமிருந்து ஈட்டும் போது வரி செலுத்துதல் எனும் அடிப்படையில் மாதாந்தம் குறைக்கப்பட்ட பணத் தொகையை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் உள் நாட்டு வருமான ஆணையாளருக்கு வைப்பிலிட வேண்டியிருப்பினும், 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் கம்பனியில் பணியாற்றிய தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் நிதி உத்தியோகத்தர்களிடமிருந்து ஈட்டுகையில் செலுத்த வேண்டிய வரியாகக் குறைக்கப்பட்டிருந்த ரூபா 326,000 ஆன பணத் தொகை உள் நாட்டு வருமான ஆணையாளருக்கு வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(இ)	2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனி சட்டத்தின் 131 (1) பிரிவு	i. ஒவ்வொரு கம்பனியும், வருடாந்தம் ஐந்தாவது உப ஆவணத்தில் குறிப்பாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை, குறித்த ஆவணப் படிவத்தின் பிரகாரம் தயாரித்து பதிவாளருக்கு கையளிக்க வேண்டியிருப்பினும், ஏனைய கம்பனிகளுடன் ஒப்பிடுகையில் குறித்த கம்பனி அத்தகைய அடிப்படையில் செயற்பட்டிருக்கவில்லை.
	223 (1) பிரிவு	ii. இப் பிரிவின் பிரகாரம் கம்பனியினால் பணிப்பாளர்கள் மற்றும் செயலாளர்கள் தொடர்பான ஆவணமொன்று பராமரிக்கப்பட வேண்டியிருப்பினும், அத்தகைய அடிப்படையில் செயற்பட்டிருக்கவில்லை.
	223 (2) ஆவது உப பிரிவு (அ), (ஆ)	iii. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் கம்பனியின் பணிப்பாளர் சபை மற்றும் செயலாளர்கள் மாறுபட்டிருப்பினும், இப் பிரிவின் பிரகாரம் அம் மாற்றத்தை பதிவு செய்யும் பொருட்டு குறித்த விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் பதிவாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ)	அரச வணிக திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 ஐ உடைய சுற்றறிக்கை	
(i)	வழிகாட்டி இலக்கம் 2.3	கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கூட்டுத் திட்டத்துடன் ஒன்றிணைந்த செயலாற்றுகை திட்டம், வருடாந்த பாதீட்டு ஆவணம் ஆகியன சமாந்தர நிலை அமைச்சின் செயலாளர் மற்றும் அரச வணிக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.
(ii)	முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 2	முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 2 இன் பிரகாரம் கம்பனியினால் முன்னெடுப்புத் தொகுதி மற்றும் நிர்வாக செயன் முறை நிலை நாட்டப்பட்டிருக்கவில்லை.
(iii)	முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 3.1 (i)	2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கம்பனியின் பணிக் குழு 08 அங்கத்தவர்களை தன்னகத்தே கொண்டு இயங்கியிருப்பினும், கம்பனியின் ஆட் சேர்ப்புத் திட்டம் அல்லது பணிக் குழு தொடர்பாக அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii)	முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 6.7	கலந்தாலோசிப்பு ஆண்டு தொடர்பாக கம்பனியினால் வருடாந்த உண்மை சொத்து மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.
(iii)	முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 7.3	கம்பனியின் பணிப்பாளர் சபையினால் முதல் நிலை செயலாற்றுகை சுட்டி (KPI) அனுமதிக்கப்பட்டு செயலாற்றுகை திட்டம் மற்றும் பாதீட்டுடன் (KPI) காலத்துக்கேற்ப பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை
(iv)	முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 7.4	பணிப்பாளர் சபையினால் கம்பனியின் பௌதீக மற்றும் நிதி விருத்தி, குறித்த பணிக்கான மூலதனம், நிதியோட்டம், திரவத் தன்மை மட்டம் மற்றும் கடன் நிலைப்பாடு (Debt Position) ஆகிய விடயங்களுடன் தொடர்புடைய அறிக்கைகள் மாதாந்தம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.
(v)	முன்னெடுப்புக் கையேடு பந்தி இலக்கம் 7.5	கம்பனியினால் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் தயாரிக்கப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கைகள் திறைசேரிக்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 **2018** இன் இலக்கம் **19** ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் **12** (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கம்பனியின் அதிகாரங்கள், செயற் பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இசைவாகாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக.

2.2.4 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 **(ஏ)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் குறித்த காலப் பகுதிகளில் கம்பனியின் வளங்களை மிகச் சிக்கனமாகவும், வினைத் திறன் மிக்கதாகவும் மற்றும் முனைப்புடனும் தொடர்புடைய சட்ட திட்டங்களுக்கு ஏற்ப பெறுகை செயற்பாடு நடைமுறை பின்பற்றப்பட்டு பெற்றுக் கொள்ளப்படவில்லையென.

(அ) கம்பனியினால் ரூபா 209,000 க்கு கொள்வனவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள வளிப் பதனாக்கி இயந்திரங்கள் இதற்கு முன் கம்பனியின் அலுவலகம் நிலை நாட்டப்பட்டிருந்த கட்டிடத்தின் பொருத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், வளிப் பதனாக்கி இயந்திரங்கள் தற்சமயம் கம்பனியின் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) பெறுகை வழிகாட்டல் குறிப்பின் 4.2 ஆவது பிரிவின் பிரகாரம், கலந்தாலோசிப்பு வருட கால கட்டம் தொடர்பாக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கலந்தாலோசிப்பு வருடத்தில் ரூபா 125,000 ஆன கணினி இயந்திரங்களை கொள்வனவு செய்கையில் பெறுகை வழிகாட்டல் குறிப்பின் 1.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்ப்பார் நோக்கங்களான பெறுகை செயற்பாட்டின் பொருளாதாரப் பலன்கள், காலத்துக்கேற்ப பொருத்தமானது எனும் வடயம் மற்றும் தராதர நிலையை மேம்படுத்தக் கூடிய வகையில் பெறுகை செயற்பாடு பின்பற்றப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

2.3 **பிற விடயங்கள்**

(அ) கம்பனியின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பான தகவல்கள் 2023 ஜூலை 27 ஆம் திகதி கணக்காய்வுக்கென முன் வைக்குமாறு அறிவிக்கப்பட்டிருப்பினும், 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செயற்பாடுகளுக்கென தகவல்களை முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம், 2021 நிதி வருடத்துடன் தொடர்புடைய நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பான கணக்காய்வு விடயப் பரப்பு வரையறுக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரச வணிக திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 ஐ உடைய சுற்றறிக்கையின் வழிகாட்டல் 6.6 இன் பிரகாரம் வரைவுபடுத்தப்பட்ட வருடாந்த அறிக்கையும், இறுதிக் கணக்குகளும் நிதி வருடம் நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன் வைக்க வேண்டியிருப்பினும், கம்பனியினால் கலந்தாலோசிப்பு வருடத்தின் இறுதிக் கணக்குகள் 20 மாத காலப் பகுதி தாமதமடைந்து, அதாவது 2023 ஒக்டோபர் 30 ஆம் திகதி முன் வைக்கப்பட்டிருந்தது.

(இ) சொத்து வகை குறிப்பு மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய நடைமுறை சொத்துக் கணக்குகள் மற்றும் அச் சொத்துக்களுடன் தொடர்புடைய தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்குகள்

பொதுப் பேரேடுகளில் சுட்டிக் காட்டப்படாதிருந்ததுடன், மீதிகளை அடையாளம் காண்கையிலும் அப் பெறுமானங்கள் குறித்துக் காட்டப்படவில்லை.

ஒப்பம்/ டப்ளியு. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

தேசிய கணக்காய்வு அலுவலகம்,

ஐயா,

இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனியின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவை தொடர்பான 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அறிக்கை

மேற்குறித்த விடயம் தொடர்பான தங்களது இலக்கம் PSE/D/SLCF/01/21/01 ஐ உடைய 2021 நவம்பர் 28 ஆம் திகதிய கடிதத்துடன் தொடர்புபடும். அக் கடிதத்துல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கான பதில்களை இத்துடன் முன் வைக்கின்றேன்.

1.2 **அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) கம்பனியின் நடப்பு நிதி நிலைமையின் பிரகாரம் சொத்துக்களை மதிப்பிடும் மற்றும் மீள் கணிப்பிடும் செயற்பாடு தொடர்பான செலவை ஏற்றல் கடினமான விடயமாகக் காணப்படுகின்றது. எனினும், இது மிகவும் அத்தியாவசியமான விடயமாகக் காணப்படுவதால் எதிர்வரும் காலப் பகுதியில் இப் பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) குறிப்பிடப்பட்டுள்ள கப் வண்டி செயலாளர், சுற்றாடல் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட கப் வண்டியாகக் காணப்படுவதுடன், அதனை கம்பனிக்கு கையேற்ற பிற்பாடு சொத்துக்களின் கீழ் அதனை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) எதுர்வரும் காலப் பகுதியில் இத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முறையாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) எதிர்வரும் காலப் பகுதியில் இத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முறையாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) கம்பனியின் நிதி நிலைமையின் பிரகாரம், இது வரை இப் பணத் தொகையை தீர்ப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருப்பினும் எதிர்வரும் கால கட்டத்தில் அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) இச் சேவை இது வரை முன்னெடுக்கப்படாதிருப்பதுடன், மத்திய சுற்றாடல் அதிகார சபை இது தொடர்பாகக் கவனம் செலுத்தவில்லையென அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதனால் இது தொடர்பாக மேலும் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

(எ) எதிர்வரும் வருடங்களில் கணக்குகளைத் தயாரிக்கையில் இத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கு ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) 2021 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்பட்ட 07 பற்றுச் சீட்டுக்களின் பிரதிகள் கணக்காய்வுக்கென முன் வைக்காதிருப்பதுடன், முன் வைக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ) 2020 ஆம் ஆண்டில் நிலையான வைப்புத் தொகை, பணம் மற்றும் பணத்துக்குச் சமமானவற்றின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் அந் நிலையான வைப்பு நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ஒ) கடந்த கணக்காய்வு அவதானிப்புகளின் பிரகாரம் இக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஓ) செலுத்த வேண்டிய பணி நன்கொடை மற்றும் அனுப்ப வேண்டிய கட்டணங்களின் சரியான பெறுமதி கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்ட திட்டங்கள் / ஆணைகளுக்கான அவதானிப்புக் குறிப்பு

(அ) இச் சிறு அளவான பணத் தொகை செலுத்துகை சாதாரண நிதியேட்டில் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. சிறு அளவான பணப் புத்தகம் கணினி எக்செல் (Excel) மென்பொருளின் மூலம் பராமரிக்கப்பட்டுள்ளது.

(ஆ)எதிர்வரும் காலப் பகுதியில் இத் தாமதங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) இன்றளவில் இவ் அனைத்துக் கொடுப்பனவுகளும் தேசிய இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்தப்பட்டிருப்பதுடன், தற்சமயம் எவ்வித தாமதமுமின்றி சீராகக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன.

(ஈ)

(i) 2020 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான ஆண்டறிக்கை தற்சமயம் அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டிருப்பதுடன், எதிர்வரும் காலப் பகுதியில் ஏனைய ஆண்டறிக்கைகளைத் தாமதமின்றி முன் வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

(ii) இது தொடர்பாக கம்பனியின் செயலாளரினால் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(உ)

(i) உபாய வழித் திட்டம் தற்சமயம் அரச வணிகத் திணைக்களத்துக்கு அனுமதிக்கென முன் வைக்கப்பட்டுள்ளது.

(ii) எதிர்வரும் கால கட்டத்தில் இது தொடர்பாகக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

(iii) உபாய வழித் திட்டம் அனுமதிக்கப்பட்ட பிற்பாடு, பணிக் குழுவை அனுமதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

(ii) எதிர்வரும் கால கட்டத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(iii) முதல் நிலை செயலாற்றுகை சுட்டி தயாரிக்கப்பட்டு கூட்டுத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், எதிர் வரும் கால கட்டத்தில் அது கலந்தாலோசிப்பிற்கென முன் வைக்கப்படும்.

(iv) எதிர் வரும் கால கட்டத்தில் இது தொடர்பாகக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

(v) இவ் அறிக்கை அமைச்சுக்கு முன் வைக்கப்பட்டுள்ளது.

2.2.4 2018 இன் இலக்கம் 18 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர கம்பனியின் வளங்களை மிகச் சிக்கனமாகவும், வினைத் திறன் மிக்கதாகவும் மற்றும் முனைப்புடனும் குறித்த காலப் பகுதியினுள் தொடர்புடைய சட்ட திட்டங்களுக்கு ஏற்ப பெறுகை செயற்பாடு நடைமுறை பின்பற்றப்பட்டு பெற்றுக் கொள்ளப்படவில்லையென

(அ) இந் நிலையான வைப்பு வருடாந்தம் புதுப்பிக்கப்படும் வகையில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு வருடத்திலும் குறித்த வட்டித் விகிதத்தின் பிரகாரம் கம்பனிக்கு வட்டி வருமானம் கிடைத்துள்ளது. அதனடிப்படையில், ஒவ்வொரு வருடத்துடனும் தொடர்புடைய வட்டி விகிதம் 11.75% ஆகக் காணப்படுவதில்லையென அறிவிப்பதுடன், 2023.06.22 ஆம் திகதியிலிருந்து மீண்டும் புதுப்பிக்கப்படுகையில் கம்பனிக்குக் கிடைத்துள்ள வட்டி விகிதம் 11% ஆகக் காணப்பட்டது.

(ஆ) இவ் வளிப் பதனாக்கி, இதற்கு முன்பு கம்பனியின் அலுவலகம் நிலை நாட்டப்பட்டிருந்த கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளது. அக் கட்டிடத்திலிருந்து நீங்கிய பிற்பாடு வளிப் பதனாக்கி இயந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பதுடன், அதனை எதிர்வரும் காலப் பகுதியில் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

(இ) எதிர்வரும் காலப் பகுதியில் பெருகை நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படும்.

2.3 **பிற விடயங்கள்**

(அ) எதிர்வரும் காலப் பகுதியில் ஆண்டறிக்கைகளைத் தாமதமின்றி முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை அமைச்சுக்கு முன் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) கம்பனியின் விற்பனை மேம்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம், எதிர்வரும் காலப் பகுதியில் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

(இ) எதிர்வரும் காலப் பகுதியில் இது தொடர்பாக சரி செய்கை மேற்கொள்ளப்படும்.

....

கே. எச். எம். எச். எச். அபேரத்ன

தலைமை நிறைவேற்று அதிகாரி - பதில் கடமையாற்றும்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி